செ.வெ.எண்: 80 நாள்: 29.08.2016

## *புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக அங்காடி கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.*

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக அங்காடி கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய பொதுவிநியோக அங்காடி கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் நியாயவிலைக்கடைகளுக்கு புதிய கட்டிடம் கட்ட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், விராலூர் ஊராட்சி, கொடிக்கால்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பொதுவிநியோக அங்காடி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கொடிக்கால்பட்டி, பகவான்பட்டி, புறசங்கால்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று தனியாக பகுதி நேர நியாயவிலைக்கடை ஏற்படுத்தப்பட்டதுடன் தற்பொழுது அதற்கு புதிய கட்டிடமும் பெரும் முயற்சி எடுத்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. விராலிமலை சட்டமன்ற தொகுதியில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவேரி கூட்டுகுடிநீர்த்திட்டம் ரூ.310 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு தற்பொழுது சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதுடன் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, ஒன்றியக்குழுத்தலைவர் திரு.எம்.சுப்பையா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.விஜயநாதன், திருமதி.உதயக்குமாரி, உதவிப்பொறியாளர் திரு.சித்திரவேல், ஆத்மா குழுத்தலைவர் திரு.எஸ்.பழனியாண்டி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.ரெ.கிருஷ்ணன், திருமதி.சித்ராபழனிச்சாமி, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.பாரதிவெள்ளைக்கண்ணு, ஊராட்சிமன்ற துணைத்தலைவர் திரு.நல்லமணி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**